DBCY publication

போஸ்கோ இலக்கிய இதழ்
தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 10-22
ISSN :XXX-XXXX

# நற்றிணையில் எண்வகை மெய்ப்பாடுகள்

**பா.சீனிவாசன்**
**உதவிபேராசிரியர் தமிழ்,**
**டாக்டர்.ஆர்.கே.சண்முகம் கலை**
**மற்றும் அறிவியல் கல்லூரி,**
**இந்திலி, கள்ளக்குறிச்சி.**

**ஆய்வுச் சுருக்கம் :**

நம் இலக்கியங்களுள் காலத்தால் முற்பட்டது தொல்காப்பியம் ஆகும். இன்றய சூழலுக்கு தேவைப்படும் கருத்துக்கள் அனைத்தினையும் தொல்காப்பியத்தில் எழுத்து சொல் பொருள் என மூன்று அதிகாரங்கள் படைத்து அதன் வழி தன் தொல்காப்பியர் விளக்கியுள்ளார். அத்தொல்காப்பிய அதிகாரங்களில் ஒன்றான பொருளதிகாரத்தின் ஆறாவது இயலான மெய்ப்பாட்டியலில் மனிதனின் உள்ள உணர்ச்சிகளை எண்வகை மெய்ப்பாடுகளாக அமைத்ததோடு அவ்மெய்ப்பாடுகள் ஒவ்வொன்றுக்கும் நான்கு நான்கு நிலைக்கலன்களை தோற்றுவித்து 32 நிலைக்கலன் உறுப்புகளில் விளக்கியுள்ளார். இதனைப் போன்று சங்க காலச் சிறப்புகளையும் வாழ்க்கை முறையினையும் அகம்,புறம் என பிரித்து படம் பிடித்துக் காட்டுவன சங்க இலக்கிய நூல்களான பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் ஆகும். இவ்சங்க இலக்கிய எட்டுத் தொகை நூல்களில் ஒன்றான நற்றிணையில் பயின்று வந்துள்ள தொல்காப்பிய மெய்ப்பாடுகள் குறித்து இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றது.

**Abstract:**

Tolkappiyam is one of the oldest in our literature. Tolkappiyar has created three chapters in Tolkappiyam with all the ideas required for today's context and explained its way. In the Sixth Realm of Economics, one of the supernatural powers, he organized man's emotions into numerical realities, each of which created four four-dimensional cells and explained them in 32 stationary elements. Similarly, the Sangam literary texts are tens and eights, which capture the Sangam

period specialties and way of life internally and externally. This article explores the Tolkappian realities that have been studied in one of the eight volumes of Ivsanga literature.

**கலைச் சொற்கள் :**

*சிரிப்பு சிகிச்சை, லாக்ரிமல் சுரப்பி ,செக்ரெடொமொடொர்,சோகரஸம்*

**அறிமுகம்:**

பண்டைய தமிழர்களின் வாழ்வினை உள்ளங்கை நெல்லிக்கனி போல் அறிந்து கொள்ள உதவுவது சங்க இலக்கியங்களே எனலாம். அவற்றில் பாட்டு தொகை என்றழைக்கப்படும் எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் அக்கால மக்களின் வாழ்க்கையை அகம் புறம் எனப் பிரித்து எடுத்தியியம்புகின்றன.அவ்எட்டுத்தொகையினில் நல் என்றழைக்கப்படும் நற்றிணையில் தலைவன் தலைவியின் அகஉணர்வுகள் தெளிந்த நீரோடை போன்று எடுத்துரைக்கப்படுகின்றது.இதனைப் போன்று மனிதர்களுக்கு இலக்கணம் கூறும் நூல் தொல்காப்பியம் ஆகும். அத்தொல்காப்பியத்தில் மனிதனின் உள்ள உணர்வுகளை தொல்காப்பியர் பொருளதிகார மெய்ப்பாட்டியல் வாயிலாக

**“நகையே அழுகை இளிவரல் மருட்கை அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று**
**அப்பால் எட்டாம் மெய்பாடென்ப”** [1]

என்ற இலக்கணம் அமைத்து விளக்கி கூறுகின்றார். இம்மெய்ப்பாடுகள் நற்றிணையில் எவ்வாறு பயின்று வந்துள்ளது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

.

**மெய்ப்பாடு வரையறை:**

மெய்ப்பாடு என்னும் சொல்லுக்குப் பொருட்பாடு, வெளிப்பாடு, புலப்பாடு எனப் பல விளக்கங்கள் வழங்கப்படுகின்றன. இதனை உள்ளத்தில் உள்ள மகிழ்ச்சி, சோகம் போன்ற உணர்ச்சிகளின் உடல் வழியான வெளிப்பாடு எனலாம். அதாவது உள்ளத்து உணர்ச்சிகளை புலன்களின் வழி வெளிக்கொணர்வது மெய்ப்பாடு ஆகும். தாசன் அவர்கள் “உடலசைவுகளால் வெளிக் காட்டப் பெறும் உள்ளக் கிளர்ச்சியே”[2] எனக் கூறுவது உற்றுநோக்கதக்கது.

**மெய்ப்பாடு அறிஞர்கள் கூற்று :**

தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 10-22
ISSN :XXX-XXXX

I. இளம்பூரணார் மெய்யின் கண் தோன்றுதலின் மெய்ப்பாடாயிற்று என்கின்றார்.

II. பேராசிரியர் மெய்ப்பாடு என்பது பொருட்பாடு அதாவது உலகத்தார் உள்ள நிகழ்ச்சி
வெளிப்படுதல் என விளக்கமளிக்கின்றார்.

III. ச.சோமசுந்தர பாரதியார் மெய்ப்பாடு என்பது அகவுணர்வுகளை ஆழ்ந்து ஆராயாமலே
யாரும் இனிதறியப் புலப்படுத்தும் இயற்புறவுடற்குறியாகும் எனக் கூறுகின்றார்.

**மெய்ப்பாடுகளும் உணர்ச்சிகளும் :**

தொல்காப்பியர் மெய்ப்பாடுகளின் வகைகளாக நகை, அழுகை, இளிவரல்,மருட்கை,அச்சம், பெருமிதம்,வெகுளி,உவகை என எண் வகையாக குறிப்பிடுகின்றார்.இம்மெய்ப்பாடுகள் ஒவ்ஒன்று

ம் நான்கு விதமான உணர்ச்சிகளால் தோன்றும் எனவும் அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவாவை எனவும் கூறுவது குறித்து இவ்அட்டவணை வாயிலாக அறியலாம்.

| வ.எண் | மெய்ப்பாடுகள் | உணர்ச்சிகள் |
|---|---|---|
| 1. | நகை | எள்ளல் இளமை பேதமை மடன் |
| 2. | அழுகை | இளிவு இழவு அசைவு வறுமை |
| 3. | இளிவரல் | மூப்பு பிணி வருத்தம் மென்மை |
| 4. | மருட்கை | புதுமை பெருமை சிறுமை ஆக்கம் |
| 5. | அச்சம் | அணங்கு விலங்கு கள்வர் இறை |
| 6. | பெருமிதம் | கல்வி தருகண் இசைமை கொடை |
| 7. | வெகுளி | உறுப்பறை குடிகொள் அலை கொலை |
| 8. | உவகை | செல்வம் புலன் புணர்வு விளையாட்டு |

**1. நகை:**

தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 10-22
ISSN :XXX-XXXX

"இடுக்கண் வருங்கால் நகுக" [3] என்பது வள்ளுவர் வாக்கு. நகை என்ற சொல்லிற்கு சிரிப்பு என்பது பொருள் ஆகும். நகை என்பது உள்ளத்தோடு தொடர்பு கொண்டது. மனித மனத்தின் மகிழ்ச்சியின் வெளிப்பாடே நகை எனலாம். இதற்கு சிரித்தல், நகைத்தல், மகிழ்வு, இன்பம் என தமிழ்ச்சொல் அகராதி பதினெட்டு விதமான பொருள்களை தருகின்றது. பேராசிரியரும் நகை என்பதற்கு சிரிப்பு என பொருள் அளிப்பதோடு முறுவலித்து நகுதலும், அளவே சிரித்தலும், பெருகச் சிரித்தலும் என்ற மூன்றினை அதன் வகைகளாக சுட்டுகின்றார்.ஆனால் இன்றோ பொருள் ஈட்ட ஓடி ஓடி உழைத்து சிரிப்பு என்பதை மறந்ததோடு அதனை சிரிப்பு சிகிச்சை (laugh therapy) என்ற பெயரில் மேற்கொண்டு வருகின்றோம். தொல்காப்பியர் அன்றே சிரிப்பின் பயனை உணர்ந்ததால் தான் எண் வகையான மெய்ப்பாடுகளில் முதலாவதாக அமைத்துள்ளார். அதோடு எள்ளல், இளமை, மடன், பேதைமை, என்னும் நான்கு நிலைக்கலன்களை கொண்டு நகை பிறக்கும் என தொல்காப்பியர் கூறுவதனை

**"எள்ளல் இளமை பேதைமை மடனென்று**
**உள்ளப்பட்ட நகைநான் கென்ப"[4]**

என்னும் நூற்பா கொண்டு அறிய முடிகின்றது.

**a) எள்ளல்:**

தன்னைத் தானே அல்லது பிறரை பார்த்து இகழ்ச்சியாகவோ கேலி பேசுவதாகவோ, நகைப்பதாகவோ அமைவது எள்ளல் எனப்படும். எள்ளல் என்பதற்கு இகழ்ச்சி, நிந்தை செய்தல், இன்பம், நிந்தித்தல், நகைத்தல்,சிரித்தல் என சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதி பொருள்களைத் தருகின்றது. தலைவி இயற்கையாக தோன்றும் மின்னல் கூட தன்னை எள்ளி நகையாடுகின்றது எனக் கூறுவதன் வாயிலாக எள்ளல் மெய்ப்பாடு தோன்றியதனை

**"இலங்கு வளை நெகிழ்த்த கலங்கு அஞர் எள்ளி**
**நகுவது போலுமின்னி"[5]**

என்ற இவ்வரிகள் உணர்த்துகின்றது.

**b) இளமை:**

தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 10-22
ISSN :XXX-XXXX

ஒருவரின் அறிவின்மை காரணமாக நகைப்பது இளமை எனப்படும். இதனை தன் இளமை கொண்டு பிறரை நகுதலும் பிறர் இளமைக் கண்டு தான் நகுதலும் எனப் பொருள் தருகின்றார் பேராசிரியர். கழகத் தமிழ் அகராதி சிறுபருவம், அறிவின்மை, முதிராமை என பல பொருள்களைத் தருகின்றது. இளமையை விட சிறந்த பொருள்வளம் இவ்வுலகில் இல்லை அவ்இளமை கழிந்த பின் தேடிய பொருளால் எவ்வித பயன் உண்டோ என அறியாமை கொண்ட நெஞ்சிடம் நகைத்து கூறுவதன் வாயிலாக இளமை மெய்ப்பாடு தோன்றியது குறித்து

**"இளமை கழிந்த பின்றை வளமை**
**காமம் தருதலும் இன்றே அதனால்"[6]**

இவ்வரிகள் எடுத்துரைப்பதைக் கொண்டு அறியலாம்.

**c) பேதமை:**

எந்த ஒரு செயலினையும் பகுத்தறியாமல் செய்யும் அறிவற்ற செயல் பேதமை எனப்படும். இதனால் தான் இம்மெய்ப்பாட்டிற்கு அறிவின்மை என பேராசிரியர் விளக்கம் அளிக்கின்றார். தமிழ் அகராதிகளும் பேதைமை என்னும் சொல்லிற்கு அறிவின்மை, மடமை என பல பொருள்களைத் தருகின்றது. தன்னை வருத்துவது தலைவனின் நினைவுகளே அது அறியாமல் பேய் என்னை வருத்துவதாக எண்ணி அதனை போக்க வேலனைக் கொண்டு வெறியாட்டு நடத்தும் தாயின் அறியாமையை தலைவி நகைப்பதினால் பேதமை மெய்ப்பாடு வெளிப்படுவதனை

**"வேலன் வேண்ட, வெறி மனை வந்தோய்!**
**கடவுள் ஆயினும் ஆக, மடவை மன்ற, வாழிய முருகே"[7]**

என்ற வரிகள் தெளிவுப்படுத்துகின்றது.

**d) மடன்:**

ஒன்றை உள்ளவாறு உணராமல் தவறாக உணருவது மடமை எனப்படும்.இதனைப் பேராசிரியர் பெரும்பான்மையுங் கொளுத்தக் கொண்டு விடாமை என்பதோடு தன் மாட்டும் பிறர் மாட்டும் நிகழும் என விளக்கமளிக்கின்றார். தமிழ் அகராதிகள் சில இதற்கு அறிவிலான், மடமை என்றும் பொருள்கள் தருகின்றன. தலைவன் தலைவி மீது கொண்டுள்ள காதலை தெரிவிக்க முற்படுகின்றான். ஆனால் தலைவியோ நாணத்தால் தலை கவிழுந்து நிற்க அதனை உணராமல் அறிவு மழுங்கி நிற்பதாக எண்ணியதன் வாயிலாக மடன் மெய்ப்பாடு தோன்றியதை

**“மறுமொழி பெயர்த்தல் ஆற்றாள் நறு மலர்**

**ஞாழல் அம் சினைத் தாழ்இணர் கொழுதி**

**அறிவு அஞர் உறுவி ஆய் மட நிலையே?”[8]**

என்ற வரிகள் வாயிலாக அறியலாம்.

**2. அழுகை:**

இவ்மெய்ப்பாடு கருணையின் அடிப்படையில் தோன்றும் அவலத்தின் வெளிப்பாடு ஆகும். அழுகை என்பதற்கு செக்ரெடொமொடொர் செயல்பாடு காராணமாக லாக்ரிமல் சுரப்பியிலிருந்து கண்களை உறுத்தாத வகையில் கண்ணீர் சுரக்கின்ற நுணுக்கமான செயல்பாடு என அறிவியல் வழி பொருள் காணலாம்.அழுகை என்பது வடமொழியில்“சோகரஸம்”என்று அழைக்கப்படுகின்றது மனிதனின் உணர்ச்சிவயப்பட்ட ஒரு நிலைப்பாடு எனலாம்.குழந்தை பிறந்ததும் உலகுக்கு கூறும் முதல் வார்த் தை மொழி அழுகை ஆகும். அதே போல் பிறந்தவர் இறந்ததும் உறவினர்களின் இரங்கலும் இறுதி விடை அழுகையாகத்தான் அமைகின்றது. இதனைத் தான் நம் நாட்டார் இலங்கியங்கள் ஒப்பாரி பாடல்கள் என்கின்றது. இவ்அழுகை உள்ளச் சுமையைக் குறைப்பதற்கு உறுதுணையாகிறது”[9] என்று மு.வரதராசனார் விளக்கமளிக்கின்றார்.இதன் சிறப்புகளை உணர்ந்து தான் தொல்காப்பியர் அன்றே அவலவச் சுவையினை இழிவு, இசைவு,அசைவு, வறுமை என்று நான்கு நிலைக்கலன்களாக அமைத்துள்ளார் அதனை

**“இழிவே இழவே அசைவே வறுமையென**

**விளிவில் கொள்கை அழுகை நான்கே”[10]**

என்ற தொல்காப்பிய நூற்பா கொண்டு அறியலாம்.

**a) இளிவு:**

இளிவு என்பது பிறரால் இகழப்பட்டு அதனால் வரும் துன்பத்தை குறிப்பதாகும். இதற்கு இளம்பூராணார் பிறர் தன்னை எளியவனாக்குவதால் பிறப்பது என விளக்கமளிக்கின்றார். அதாவது அவமானப்படுத்துவதாலும் தன் பொருளை இழக்கும் பொழுதும் தோன்றுவதாகும். பரத்தை பிரிவு

ISSN :XXX-XXXX

மேற்கொண்டு தன் புதல்வனோடு தலைவன் இல்லம் புகுந்ததை கண்ட தலைவி தனக்கு உரிமை இல்லாதவன் எனக் கருதி அவனை அவமானப்படுத்துவதன் காரணமாக இளிவு மெய்ப்பாடு தோன்றியது குறித்து

**"நாறு இருங் கதுப்பின் எம் காதலி வேறு உணர்ந்து**
**வெரூஉம் மான் பிணையின் ஒரீஇ,**
**யாரையோ?என்று இகந்து நின்றதுவே!"** [11]

இவ்வரிகள் கொண்டு அறியமுடிகின்றது.

**b) இழவு:**

இழவு என்பதற்கு இழத்தல் என்பது பொருள் ஆகும். அதாவது தான் உயிராக நினைக்கும் பொருளை இழப்பதின் காரணமாக தோன்றும் துன்பத்தால் ஏற்படுவதாகும்.முன்பு களவில் இணைந் து இன்புற்ற தலைவி தோழியிடம் தலைவன் பிரிவால் வாடும் நான் அவன் வாழும் மலையினைக் கண்ட பொழுது அவன் நினைவால் என் கண்களில் அருவி போல கண்ணீர் பெருக்கடுத்தது வருகின்றது என கூறுவதன் வாயிலாக இழவு மெய்ப்பாடு தோன்றியதை

**"ஏந்து எழில் மழைக் கண் கலுழ்தலின் அன்னை**

**தீந்தொடை நரம்பின் முரலும்**
**வான்றோய் வெற்பன் மார்வணங் கெனவே."**[12]

ஏன்னும் இப்பாடல் விளக்குகின்றது.

**c) அசைவு :**

முந்தைய நிலையிலிருந்து வேறுபட்டு இருத்தல் காரணமாக ஏற்படும் துன்பம் அசைவு என்பதாகும். இதனால் தான் இம்மெய்ப்பாடினை பேராசிரியர் தளர்ச்சி அல்லது தன்னிலை தாழ்தல் என விளக்கமளிக்கின்றார். தலைவன் பிரிவு காரணமாக தலைவி தன் புற செயல்களை மறைப்பதி னால் ஏற்படும் துயரத்தின் காரணமாக தன் இயல்பான நிலையிலிருந்து மாறியதால் தோழிக்கு அசைவு சார்ந்த அழுகை மெய்ப்பாடு தோன்றியதை

**"முத்துப் படு பரப்பின் கொற்கை முன்துறைச்**
**சிறு பாசடைய செப்பு ஊர் நெய்தல்**
**காமம் கரப்பு அரியவ்வே!"**[13]

என்ற வரிகள் கொண்டு அறியலாம் .

**d) வறுமை:**

வறுமை என்பது போகம் துய்க்கப் பெறாமை. அதாவது இல்லாமை, இயலாமை என்பதாகும். தலைவன் தலைவியை பிரிந்திருப்பது என்பது இல்லாமையாகிய இழிவின் தாக்கம் எனக் கூறுவதின்

மூலம் வறுமை மெய்ப்பாடு தோன்றியதனை

**"இவளின் தீர்ந்தும், ஆள்வினை வலிப்ப,**
**அரிதுமன்றம்ம, இன்மையது இளிவே"[14].**

என்ற இவ்வரிகளில் காணலாம்.

### 3. இளிவரல்:

இளிவரலென்பது இழித்தல் உணர்வு என்றும் அருவருப்பு என்ற பொருளிலும் வழங்கப் படுகின்றது.உயிர் வாழ ஒல்லாமல் மானம் குன்ற வரும் இளிநிலையே இளிவரல் என சோமசுந்தர பாரதியார் கூறுகின்றார். அதாவது ஒரு நோயாளியையோ பிணத்தையோ காணும் பொழுது தோன்றும் அருவருப்பு,முகம் சுளித்தல் இவற்றால் உண்டாகும் முகமாற்றமே இளிவரல் எனப்படும். இது மூப்பு, பிணி, வருத்தம், மென்மை என்ற நிலைக்கலன்களை கொண்டு தோன்றும் என்பதை

**"மூப்பே பிணியே வருத்த மென்மையொடு**
**யாப்புற வந்த இளிவரல் நான்கே".[15]**

என்னும் வரிகள் வெளிப்படுத்துகின்றது.

#### a) மூப்பு:

மூப்பு என்னும் சொல்லுக்கு முதுமை, தலைமை என பல பொருள்களை தமிழ் அகராதி அளிக்கின்றது. இது தன் மூப்பு பிறர் மூப்பு என இரு வழிகளில் தோன்றும். தலைவி தோழியிடம் காலத்தே பயிர் செய்தால் தான் நன்மை பெற முடியும் அது போல் இளமையை சரியான காலத்தில் பயன்படுத்த வேண்டும் என்பதை அறியாமல் என்னை விட்டு நீங்கி சென்றுள்ளார் தலைவி கூறுவதோடு தன் இளமை மட்டுமல்லாமல் தலைவனின் இளமையும் வீணாகின்றது என வருந்தியதன் வாயிலாக மூப்பு மெய்ப்பாடு தோன்றியதை

**"முதிர்ந்தோர் இளமை அழிந்தும் எய்தார்**
**வாழ்நாள் வகை அளவு அறிஞரும் இல்லை" [16]**

என்ற வரிகளை கொண்டு அறியமுடிகின்றது.

ISSN :XXX-XXXX

**b) பிணி :**

இதற்கு நோய் துன்பம் என்று அகராதிகள் பொருள் அளிக்கின்றன. பிணியுறவு கண்டு இழித்தல் என இளம்பூரணர் விளக்கமளிக்கின்றார். இதனை நீங்காத பசி,நிறைவேறாத காமம்,நோய், வருத்தம் போன்றவற்றால் தோன்றக்கூடிய அருவெருப்பு எனலாம். தலைவி தலைவன் பிரிவால் வாடி நின்றதை பார்த்து அவன் வரும் வரை இவளின் நிலையை எண்ணி வருந்தி தோழி நோயுற்றதால் பிணி என்னும் மெய்ப்பாடு உண்டாகியதை

**“கெடு துணை ஆகிய தவறோ?-வை எயிற்று,**
**பொன் பொதிந்தன்ன சுணங்கின்,**
**இருஞ் சூழ் ஓதி, பெருந் தோளாட்கே”.**[17]

இவ்வரிகள் உணர்த்துகின்றது.

**c) வருத்தம்:**

இது துன்பம் என்று பொருள்படும். தனக்கு மட்டுமல்லாமல் பிறர்க்கு ஏற்படும் துன்பம் கண்டு வருந்துவதினாலும் உண்டாவது எனலாம். பொருள்வயிற் சென்ற தலைவனுக்கு தலைவி அவன் பிரிவினை தாங்காமல் தன் கூந்தலில் முகம் மறைத்து அழுது துன்புற்று நின்றாள். அக்காட்சி அவளை விட்டு பிரிந்த பின்பும் தலைவனுக்கு தோன்றி அந்நினைவு துன்பத்தை உண்டாக்கியதால் வருத்த மெய்ப்பாடு தோன்றியதை

**“இம்மென் பெருங் களத்து இயவர் ஊதும்**
**ஆம்பல்அம் குழலின் ஏங்கி**
**கலங்கு அஞர் உறுவோள் புலம்பு கொள் நோக்கே”**[18]

என்ற இப்பாடல் வரிகள் வாயிலாக உணரலாம்.

**d) மென்மை:**

இம்மெய்ப்பாட்டிற்கு நல்குரவு என இளம்பூரனாரும்,வலிக்குன்றியிருத்தல் என பேராசிரியரும் பொருள் விளக்கம் அளிக்கின்றனர்.இது தான் சார்ந்தும் பிறர் சார்ந்தும் தோன்றக் கூடியதாகும். தோழி தலைவனிடம் தன் வலிமை கொண்டு வன்சொற்கள் பேசுவது பகட்டாக வாழ்வது

தொகுதி: 01 இதழ்: 01 ஜூலை2021 10-22
ISSN :XXX-XXXX

என்பதெல்லாம் செல்வம் இல்லை அவை செய்வினைப் பயனால் கிட்டியது. பிறர்படும் துன்பத்தை தன் துன்பமாக கருதி வாழ்வதே சிறந்த செல்வம் எனக் கூறுவதன் மூலம் இளிவரலின் மென்மை மெய்ப்பாடு தோன்றியது குறித்து

**"செல்வம் அன்று; தன் செய் வினைப் பயனே;**

**சான்றோர் செல்வம் என்பது, சேர்ந்தோர்**

**புன்கண் அஞ்சும் பண்பின்**

**மென் கட் செல்வம் செல்வம் என்பதுவே."[19]**

என்ற வரிகளில் காணமுடிகின்றது.

**4. மருட்கை:**

மருட்கை என்பதற்கு வியப்பு ,குழப்பம், மயக்க உணர்வு,தெளிவில்லாமை உணர்வு என்பது பொருளாகும். புதிய ஆக்கத்தினையும் அரிய ஒன்றினையும் காணும் பொழுது தோன்றும் மனக்

குறிப்பினை மருட்கை எனலாம். இம்மெய்ப்பாடு புதுமை பெருமை சிறுமை ஆக்கம் என்ற நிலைக்கலன்களை கொண்டு பிறக்கும் என தொல்காப்பியர் கூறுவதனை

**"புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு**

**மதிமை சாலா மருட்கை நான்கே."[20]**

என்ற நூற்பாவின் மூலம் அறியலாம்.

**a) புதுமை:**

எவ்விடத்திலாவது எப்பொழுதாவது பொருள் தோன்றிய வழியும் , காணாததை கண்ட பொழுதும், நிகழாது நிகழ்ந்த வகையிலும் தோன்றுவது புதுமை எனப்படும். தலைவி தன் தோழியோடு வளர்த்த புன்னை மரத்தினை நோக்கிய அன்னை அது உங்களோடு பிறந்த தங்கை எனக் கூறுவது புதுமையாக இருப்பதன் காரணமாக மருட்கை மெய்ப்பாடு தோன்றியதினை

**"நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும் என்று**
**அன்னை கூறினள் புன்னையது நலனே"[21]**

இவ்வரிகள் உணர்த்துகின்றது.

**b) சிறுமை:**

ISSN :XXX-XXXX

இது நுண்ணியன கண்டு வியத்தல் எனப் பொருள்படும். ஊர்ப் பெண்டிர் தலைவியின் உடன்போக்கு காரணமாக பெருங்குடியில் பிறந்து, பெருநாணம் கொண்ட செயலா இது என அவளை அவமானப்படுத்தியதினால் சிறுமை மெய்ப்பாடு தோன்றியதை

**"சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி**
**மூக்கின் உச்சிச் சுட்டு விரல் சேர்த்தி**
**மறுகில் பெண்டிர் அம்பல் தூற்ற"**[22]

என்ற பாடல் வழி அறியலாம்.

**c) பெருமை:**

பெருமை என்பது முன்பு இருந்த பொருட்கள் நிலையினை விட அளவில் பெருத்திருத்தல் கண்டு வியத்தல் என்பதாகும். தோழி தலைவியிடம் நீ மகிழும் வண்ணம் பொன் பொருள்களை கொண்டு வருவான் என பொருள் தேடிச் சென்ற தலைவன் பற்றி பெருமைப்பட கூறியதன் வாயிலாக மருட்கை மெய்ப்ப்பாடு தோன்றியதனை

**" நட்டோர் ஆக்கம் வேண்டியும் ஒட்டிய**
**நின் தோள் அணி பெற வரற்கும்**
**அன்றோ- தோழி!- அவர் சென்ற திறமே"** [23]

என்ற பாடல் உணர்த்துகின்றது.

**d) ஆக்கம்:**

ஒன்றன் பரிணாம வளர்ச்சி மாற்றம் காரணமாக வியத்தல் ஆக்கம் எனப்படும் . அதாவது சிறியோர் பெரிய செயல் செய்தல்,பெரியோர் சிறிய செயல் செய்தல், ஒன்று ஒன்றாய் மாற்றம் அடைதல் என்பதாகும். தோழியிடம் தலைவி மலை வளத்தோடு சிறந்த பண்புநலன்களையும் கொண்டவன் தலைவன் அவன் நமக்குள் நட்பு வேண்டாம் என்று ஒதுக்காமல் மணந்துகொள்கிறேன் என்று அவன் தூது விடுத்திருக்கிறான். எனவே அன்னை வினவும் பொழுது அறத்தோடு நிற்றல் வேண்டும் என்று புதிய ஆக்கதோடு கூறியதன் வழி மருட்கை தோன்றியதை

**" நப் புணர்வு இல்லா நயன் இலோர் நட்பு**

**அன்ன ஆகுக என்னான்**

**ஒல்காது ஒழி; மிகப் பல்கின தூதே"**[24]

இப்பாடல் கொண்டு அறியலாம்.

**5. அச்சம்:**

அச்சம் என்பது வரவிருக்கும் அபாயம் மற்றும் அவப்பெயர் குறித்து ஏற்படும் மன நடுக்கம் என்பதாகும். மனிதனின் உணர்ச்சி மயமான வாழ்வில் அச்சம் இன்றியமையாதாகின்றது என்றும் உணர்ச்சிமயமான வாழ்வில் அச்ச உணர்வுகள் எளிதாக தோன்றும் என்றும் லாரென்சுபிரவுன் என்ற உளவியலார் விளக்கமளிக்கின்றார். இம்மெய்ப்பாடு அணங்கு விலங்கு கள்வர் இறை என்ற நான்கு மெய்ப்பாடுகளை கொண்டு அமையும் என்பதனை

**"அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்**
**பிணங்கல் சாலா அச்சம் நான்கே"** [25]

என்ற நூற்பாவின் மூலம் அறியலாம்

**a) அணங்கு:**

அணங்கு என்பதற்கு அச்சம், தெய்வப் பெண், தேவர்க்காடும் கூத்து எனப் பல பொருள் களைத் தருகிறது தமிழ்மொழி அகராதி. இவ்வாறு பல பொருள் காணப்படினும் இவை அனைத்திற்குமே பொதுப்பொருள் அச்சம் என்பதேயாகும். அச்சவுணர்வைத் தோற்றுவித்துத் துன்பம் தரும் பொருளனைத்தும் அணங்கு எனப்பெற்றன. இதனை அஞ்சும்படி ஆர்ப்பரிக்கும் அருவியினினை பற்றிக் கூறுவதன் வாயிலாக அணங்கு மெய்ப்பாடு தோன்றியதை

**"அருவி யார்க்கும் அணங்குடை நெடுங் கோட்டு"**[26]

என்ற இவ்வரிகள் உணர்த்துகின்றது.

**b) விலங்கு:**

அரிமா முதலிய அஞ்சத்தகுந்தவற்றை கண்டு அச்சமடைதல் என பேராசிரியர் விளக்கமளிக்கின்றார்.இதற்கு உயர்திணை அல்லது அஃறிணை உயிரினங்கள் வழி தோன்றக் கூடிய அச்சம் என பொருள் கொள்ளலாம் .தலைவன் தனி ஒருவனாக கொடிய காட்டு வழியினை கடந்து வரும்பொழுது அங்குள்ள பாம்பு களிறு புலி போன்ற அஞ்சத்தகுந்த விலங்குகளால் ஆபத்து ஏற்படுமோ என தலைவி அஞ்சுவதன் வாயிலாக இங்கு விலங்கு என்னும் மெய்ப்பாடு தோன்றியதை

**பாம்புடை விடர ஓங்கு மலை மிளிர**
**உருமு சிவந்து எறியும் பொழுதொடு பெரு நீர்**

தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 10-22
ISSN :XXX-XXXX

**நோக்கு அருஞ் சிறு நெறி நினையுமோரே**[27]

என்ற இப்பாடல் விளக்குகின்றது.

**c) கள்வர்:**

கொலை பொய் கள் களவு செய்யும் கள்வர்களைக் கண்டு அஞ்சுதல் காரணமாக தோன்றுவது ஆகும். தலைவன் உயர்ந்த மலையினை கொண்டவனாலும் தாயினைப் போன்று அன்பினை கொடுப்பவனாயினும் கள்வனைப் போன்றவன் என பிரிவின் காரணமாக வருந்தும் தலைவியிடம் தோழி கூறுவதைக் கொண்டு கள்ளவர் மெய்ப்பாடு பயின்று வந்துள்ளதை

**"அன்னை போல இனிய கூறியும்,**
**கள்வர் போலக் கொடியன்மாதோ."** [28]

என்ற பாடல் வழி அறியலாம்.

**e) இறை :**

இறை என்னும் நிலைக்களன் தந்தை ஆசிரியன் வழிபாட்டு தெய்வம் அரசன் கொண்டு ஏற்படும் என்று சுட்டப்படுகிறது. இதனைத் தான் பேராசிரியர் இறையெனப்படுபவர் தந்தையும் ஆசிரியரும் அரசரும் என்று விளக்கமளிக்கின்றார். தோழி தலைவனிடம் உன் பிரிவு அவளுக்கு பகை கொண்ட மன்னன் தன் எதிரி அரசனின் கோட்டையை தகர்க்கும் போது அவன் அஞ்சி நிற்பான் அதனைப் போன்று உள்ளது என்கின்றாள். இதில் அரசன் அஞ்ச தகுந்தவனாகியதால் இங்கு இறை மெய்ப்பாடு தோன்றியதை

**"மெய்ம் மலி உவகை ஆகின்று; இவட்கே,**

**அஞ்சல் என்ற இறை கைவிட்டெனை,**

**பைங் கண் யானை வேந்து புறத்து இறுத்தலின்;**

**களையுநர்க் காணாது கலங்கிய உடை மதில்**

**ஓர் எயின் மன்னன் போல,**

**அழிவு வந்தன்றால், ஒழிதல் கேட்டே."**[29]

என்ற வரிகளில் அறியலாம்.

தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 10-22
ISSN :XXX-XXXX

**6. பெருமிதம்:**

இது புகழ் கல்வி ஆற்றல் வீரம் போன்றவற்றால் ஏற்படும் மகிழ்வான உணர்வாகும். அறிய செயல்களை செய்து மற்றவர்களிடத்தின்று ஊர்வவாக காணப்பபௌதல் எனவும் கூறலாம். இதனை தன்னை பெரியவனாக மதித்தல் என்பதே பெருமிதம் என இளம்பூராணார் கூறுவதிலிருந்து அறியலாம். இது கல்வி தறுகண் புகழ் கொடை என நான்கு நிலைகளில் பிறக்கும் என்பதனை

**"கல்வி தறுகண் புகழ்மை கொடையெனச்**

**சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே"**[30]

இந்நூற்பா கொண்டு அறியலாம்.

**a) கல்வி:**

கல்வி தவமுதலாகிய வித்தை என்னும் பொருளில் எடுத்தாளப்படுகின்றது. அதாவது படிப்பறிவு, நூலறிவு கல்வியின் பொருட்டு ஏற்படும் பெருமிதம் எனலாம்.இக்கருத்தினை கல்வி கற்ற சான்றோர்களின் நட்பே செல்வம் அதனை விட உயர்ந்த செல்வமில்லை எனக் கூறுவதன் மூலம் கல்வி மெய்ப்பாடு தோன்றியது குறித்து

**"சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தார்**

**மென்கட் செல்வம் என்பதுவே"**[31]

இவ்வரிகள் எடுத்துரைக்கின்றது.

**b) தறுகண்:**

தறுகண் என்பது வீரம் எனப் பொருள்படும். அதாவது அஞ்சத்தக்கன கண்டு அஞ்சாமல் இருக்கும் வீரத்தால் ஏற்படும் பெருமிதம் தறுகண் எனப்படும். இதனைத் தான் அஞ்சத்தக்கண கண்ட வழி அஞ்சாமை என்கின்றார் பேராசிரியர். தன்னை மணந்து கொள்ள விரும்பி தன்னுடன் வந்த காதலியிடம் சற்று விளையாடிக் கொண்டிரு நீ என்னுடன் வருவதைக் கண்டு உன்னை அழைத்துச் செல்லும் பொருட்டு வருபவர்களை கண்டு அஞ்சாது ஓடச் செய்த பின்பு உன்னை மணந்து கொள்கின்றேன் என்று வீரமாக கூறியதன் விளைவாக தறுகண் மெய்ப்பாடு தோன்றியதை

**"நீ விளையாடுக சிறிதே; யானே**

**நுமர் வரின், மறைகுவென் மாஅயோளே"**[32]

என்ற இப்பாடல் எடுத்துரைக்கின்றது.

**c) புகழ்மை:**

பேராசிரியர் புகழ்மையை இசைமை என வழங்குகின்றார். இன்பமும் பொருளும்

அதிகமாக கிடைப்பதாயினும் பழி தரும் செயல்களை செய்யாமையே புகழ்மை எனப்படும். அது மட்டுமல்லாமல் அறிவு அழகு ஆற்றலால் ஏற்படும் புகழும் பெருமிதமே ஆகும். இங்கு தோழி உழவனிடம் நாற்று நடும் பொழுது வயலிலுள்ள கோரையும் களைகளையும் நீக்கி விட வேண்டாம். ஏனெனில் தலைவி அவற்றில் வளையலும் உடையும் செய்து அணிவாள் என அவள் மென்மையான ஆடையினைப் பற்றி சிறப்பித்து கூறியதால் புகழ் மெய்ப்பாடு தோன்றியதை

**"சாயும் நெய்தலும் ஓம்புமதி; எம்மில்**
**மா இருங் கூந்தல் மடந்தை**
**ஆய் வளை கூட்டும் அணியுமார் அவையே"**[33]

என்ற பாடல் கொண்டு அறியலாம்.

**d) கொடை :**

வரையாது வழங்கும் தன்மையே கொடை எனப்படும். அதாவது உயிர், உடம்பு, உறுப்பு முதலிய எல்லாவற்றையும் கொடுத்தல் என்பதே கொடை எனலாம். ஓரி அரசன் கொடையாக வழங்கும் வளமை போன்ற பெருஞ்செல்வத்தையே நீ ஈட்டிப் பெறுவதாயினும் தலைவியின் அன்பு முன் அது சிறிது என்பதை நெஞ்சமே அறிந்து கொள் என பெருமிதமாக கூறுவதால் இங்கு கொடை மெய்ப்பாடு வெளிப்படுவதை

**"மழவர் பெரு மகன் மா வள் ஓரி**
**கை வளம் இயைவது ஆயினும்**
**ஐது ஏகு அம்ம, இயைந்து செய் பொருளே."**[34]

என்ற இவ்வரிகள் விளக்குகின்றது.

**7. வெகுளி:**

இதற்கு சினம் என்பது பொருள். இது வெறுப்பின் காரணமாக தோன்றுவது ஆகும். நம் அறியாமையின் வெளிப்பாடே வெகுளி எனலாம்.வள்ளுவர் நமக்கு ஏற்படும் பெரும்பாலான துன்பங்களிலிருந்து விடுபடுவதற்கு நமக்குள் இருக்கும் வெகுளியினை விட வேண்டும் என

**"காமம் வெகுளி மயக்கம் இவ்முன்றன்**
**நாமம் கெடக்கெடும் நோய்."**[35]

இக்குறளின் வழி கூறுவதனைக் காணலாம். தொல்காப்பியர் இதனையுணர்ந்து இதற்கு அலை கொலை,உறுப்பறை, குடிகோள், என்ற நிலைக்கலன்களை அமைத்து விளக்கியுள்ளதை

**"உறுப்பறை குடிகோள் அலை கொலை என்ற**
**வெறுப்ப வந்த வெகுளி நான்கே."[36]**

என்ற நூற்பா மூலம் விளக்கம் தருகின்றார்.

**a) உறுப்பறை:**

உறுப்பின் ஊறு என்று சோமசுந்தர பாரதியும்,அங்கங்களை இழத்தல் என பேராசிரியரும் இம்மெய்பாட்டிற்கு விளக்கமளிக்கின்றனர். அதாவது நம் உடலில் தோன்றும் மாற்றம் அல்லது உடல் உறுப்புகளை இழத்தல் என்பது உறுப்பறை எனப்படும். தலைவன் தலைவியை மணம் புரிய காலம் தாழ்த்தியதின் காரணமாக அவளது அழகிய உடலில் பசலை படர்ந்து நோய் உண்டா கியதன் மூலம் வெகுளியின் நிலைக்கலனான உறுப்பறை தோன்றியதை

**"உயர் மலை நாடற்கு உரைத்தல் ஒன்றோ**
**துயர் மருங்கு அறியா அன்னைக்கு இந் நோய்**
**தணியுமாறு இது என உரைத்தல் ஒன்றோ"[37]**

என்ற இவ்வரிகள் எடுத்துரைக்கின்றது.

**b) குடிகோள்:**

குடிகோள் என்பது தாரமும் சுற்றமும் குடிப்பிறப்பும் முதலியவற்றுக்குக் கேடு சூழ்தல் எனப்படும். அதாவது மனைவி, சுற்றம், குடிபிறப்பு ஆகியோர்க்கு ஏற்படும் துன்பதாதல் தோன்று வதால் ஏற்படுவதாகும் . இதனை உணர்ந்து தான் பேராசிரியர் கீழ் வாழ்வாரை நலித்தல் என்று இம்மெய்பாட்டிற்கு விளக்கம் தருகின்றார். தோழி தலைவனிடம் உன் பிரிவை எண்ணி தலைவி தன் பூப்போன்ற மை தீட்டிய கண்களாள் அழுது கண்ணீர் சிந்துகின்றாள் அதனால் அவள் உடல் நலத்திற்கு கேடு நேருகின்றது எனக் கூறுவதினால் குடிகோள் மெய்ப்பாடு தோன்றியதனை

**"பூப்போல் உண்கண் புது நலம் சிதையு**
**வீங்கு நீர் வாரக் கண்டும், தகுமோ?"[38]**

என்ற இவ்வரிகளில் அறிந்துகொள்ளமுடிகின்றது.

**c) அலை :**

தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 10-22
ISSN :XXX-XXXX

அலை என்பதற்கு வைதல், நையப்புடைத்தல் என்பது பொருள்.இதனை வைதலும் புடைத்தலும் என்ற இளம்பூரணர் கூற்றிலிருந்து அறியலாம். தலைவி தலைவன் மீது கொண்ட நட்பினை நன்று அறிதல் வேண்டும். இல்லையெனில் என்னைப்போன்ற தளர்ந்த தோள்களையும் அழுத கண்களையும் மலர்ந்த உடன் கருகிப்போன பூவுக்கு ஒப்பாவாள் என்று தோழி கடிந்து கூறுவதை

**"விழுமிதின் கொண்ட கேண்மை நொவ்விதின்**
**தவறும்; நன்கு அறியாய்ஆயின், எம் போல்,**
**ஞெகிழ் தோள், கலுழ்ந்த கண்ணர்,**
**மலர் தீய்ந்து அனையர், நின் நயந்தோரே."**[39]

என்ற இவ்வரிகள் கொண்டு அறியலாம்.

**d) கொலை:**

கொலை என்பது அறிவும், புகழும் முதலாயினவற்றைக் கொன்றுரைத்தல், அல்லது கொல்லுதல் தன்மையை குறிக்கும் செயலாகும். தலைவிக்கு பசலை நோய் தோன்றுகின்றது அது எவ்வாறு உள்ளதெனில் அனசு என்னும் பரவையினை யாழ் மீட்டி கொல்வது போல் உள்ளது என்று கூறுவதினால் இங்கு கொலை மெய்ப்பாடு தோன்றியது பற்றி

**"அணி நலம் சிதைக்குமார் பசலை; அதனால்,**
**அசுணம் கொல்பவர் கை போல், நன்றும்"**[40]

என்ற இவ்வரிகள் எடுத்துரைக்கின்றது.

**8. உவகை:**

உவகை என்பது மகிழ்வு இன்பம் என்ற பொருளை குறிக்கும். இது காமம் அல்லது மகிழ்ச்சியின் வெளிப்பாட்டின் மூலம் தோன்றக் கூடியது ஆகும். மெய்பாடுகளுள் உடலோடு மனதுக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளிக்கக் கூடியது எனலாம். துன்பம் இல்லாத இன்ப மெய்ப்பாடு ஆகும். இது பிறக்கும் வழிகளாக செல்வம்,புலன்,புணர்ச்சி,விளையாட்டு என தொல்காப்பியர் கூறுவதனை

**செல்வம் புலனே புணர்வுவிளை யாட்டென்று**
**அல்லல் நீத்த உவகை நான்கே"**[41]

ISSN :XXX-XXXX

இந்நூற்பாவின் வழி அறியலாம்.

**a) செல்வம் :**

செல்வம் என்பது நுகர்ச்சி எனப் பொருள்படும். இதற்கு செல்வ நுகர்ச்சியான் வரும் உவகை என இளம்பூரனார் விளக்கம் அளிக்கின்றார். பகற் பொழுதில் வேடன் காடெல்லாம் அலைந்து வேட்டையாடி மாலையில் அப்பொருளினை மனைவியிடம் கொடுத்து விட்டு கள் அருந்தி கிடப்பான்.அதுபோன்று தாமும் கொணர்ந்த பொருளினை தலைவியிடம் கொடுத்து கவலையின்றி வாழ்வோம் என்று தலைவன் பொருட் செல்வத்தால் அடையும் உவகை பற்றி

**“வன் புலக் காட்டு நாட்டதுவே அன்பு கலந்து**
**நம்வயின் புரிந்த கொள்கையொடு நெஞ்சத்து**
**உள்ளினள் உறைவோள் ஊரே”[43]**

என்ற பாடலில் அறியலாம்.

**b) புலன் :**

புலன் என்பது ஐம்புலன் களால் பெறும் இன்பம் எனப்படும் . இதனை கல்விப் பயனாகிய அறிவுடைமை என்கின்றார் பேராசிரியர். பரதவர்கள் தம் உறவினர்களுடன் இணைந்து கள்ளினை அருந்தி மகிழ்ச்சி பொங்க திளைத்தனர் என்பதின் மூலம் உவகை தோன்றியதை

**“ தேம் கமழ் தேறல் கிளையொடு மாந்தி,**
**பெரிய மகிழும் துறைவன் எம்”[44]**

என்ற பாடலில் அறியலாம்.

**c) புணர்ச்சி:**

புணர்ச்சி என்பது காமப்புணர்ச்சி எனப்படுகின்றது. உடல் மட்டும் இணைந்து இன்பம் கொள்வதால் ஏற்படுவதோடு உள்ளத்தால் கிடைக்கும் இன்பத்தாலும் உண்டாவது புணர்ச்சி ஆகும். இதனை தலைவன் பாங்கனிடம் தலைவி தந்தையின் அகன்ற இல்லத்தில் பஞ்சு போன்ற காலடியால் பந்து உருட்டுபவள் போல அழகிய சில கூந்தல் பறக்கும்படி ஓடுகின்றாள். இதனால் இவளது பஞ்சு போன்ற காலடி நோகுமே என தலைலியின் நடையழகில் மயங்கி தன் உள்ளத்தில் தோன்றிய இன்பத்தினை தோழனிடம் கூறியதால் தோன்றிய உவகையை

**“ஆடு பந்து உருட்டுநள் போல ஓடி,**

தொகுதி: 01 இதழ்: 01 ஜூலை2021 10-22
ISSN :XXX-XXXX

**அம் சில் ஓதி இவள் உறும்**

**பஞ்சி மெல் அடி நடைபயிற்றும்மே!'[45]**

என்ற இவ்வரிகள் எடுத்துரைக்கின்றது.

**d) விளையாட்டு:**

விளையாட்டு என்பது ஆறு , குளம், சோலை முதலியவற்றில் விளையாடி மகிழ்தல் ஆகும். அதோடு உடலுக்கும் உள்ளத்துக்கும் வலுசேர்க்கக் கூடியது. இதனைப் பேராசிரியர் யாறுங்குளனுங் காவுமாடிப் பதியிகந்து வருதல் என்கின்றார். இதனை விளையாட்டின் மூலம் உடல்

கலைப்பு நீங்குவதோடு உள்ளத்துக்கும் வலு சேர்க்கும் என்பதையறியாமல் அன்னை தடுக்கின்றா லே என்று தலைவி தோழியிடம் கூறியதால் உவகை தோன்றியதை

**வடிக்கொள் கூழை ஆயமொடு ஆடலின்**

**இடிப்பு மெய்யதுஒன் றுடைத்தே"[46]**

என்ற இப்பாடல் எடுத்துரைக்கின்றது.

**நிறைவுரை:**

மெய்ப்பாடுகள் பற்றிய விளக்கம் அவற்றை பற்றி அறிஞர்கள் கூறிய செய்திகளையும் இக் கட்டுரையின் வழி அறிந்து கொள்ளமுடிகின்றது. மேலும் நற்றிணையில் தலைவன் தலைவியின் மன உணர்வுகளின் வாயிலாகவும் மற்ற மாந்தர்களின் மன உணர்வுகளின் மூலமும் தொல்காப்பியர் கூறிய எண் வகையான மெய்ப்பாடுகளோடு அவற்றின் முப்பத்திரண்டு உறுப்புகளும் தோன்றும் விதத்தை அறியலாம்.

**I. அடிக்குறிப்புகள் :**

1. தொல் மெய்-1197
2. சிலம்பில் மெய்ப்பாடுகள்.ப.எண்- 1
3. குறள்-625
4. தொல். மெய்.நூ.1198
5. நற்- 214 -10:11
6. நற்- 126 : 08- 09

தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 10-22
ISSN :XXX-XXXX

7. மேலது-34 :10
8. மேலது -106:08-09
9. இலக்கிய ஆராய்ச்சி:ப-69
10. தொல். மெய்.நூ.1199
11. மேலது- 250:10
12. மேலது- 17:05-12
13. மேலது-23:08-09
14. மேலது -262:08-10
15. தொல். மெய்.நூ.1200
16. நற்.314:01-02
17. மேலது- 26: 07- 09
18. மேலது-நற்- 113:10- 12
19. மேலது-நற்-210:6-9
20. தொல். மெய்.நூ.1201
21. மேலது- 172:04 -05
22. மேலது-113:01 -03
23. மேலது- 286:07 -09
24. மேலது-165:06 -08
25. தொல். மெய்.நூ.1202
26. நற்-288:1
27. மேலது- 104:09-12
28. நற்-28:03-04
29. மேலது-43:7-12
30. தொல். மெய்.நூ.1203
31. நற்-104:08-09
32. மேலது--104:06-09

33. மேலது--60: 09-11
34. மேலது--52: 09-11
35. குறள் – 360

ISSN :XXX-XXXX

36. தொல். மெய்.நூ.1203
37. மேலது--244: 05-07
38. மேலது--325: 07-08
39. மேலது--315: 09-12
40. மேலது--304: 07-08
41. தொல்.மெய்:நூ.1205
42. நற்-59:06-08
43. மேலது--59:06-08
44. மேலது--388:08-09
45. மேலது--324:07-09
46. மேலது-23 :2-3

## II. துணைபுரிந்த நூல்கள்:

1. நற்றிணை 1 & 2: புலியூர்க்கேசிகன் – பாரி நிலையம்,சென்னை.2001
2. தொல்காப்பியம்: பொருளதிகாரம் பேராசிரியர் உரை - அமராவதி பதிப்பகம்,சென்னை.2017
3. தொல்காப்பியம்: இளம்பூரணர் உரை - கழக வெளியீடு , சென்னை
4. சிலம்பில் மெய்ப்பாடுகள் : டீ.ஜி.என்.தாசன்.
5. இலக்கிய ஆராய்ச்சி : மு வரதராசன்-பாரி நிலையம்,சென்னை.1948
6. திருக்குறள் உரை : ஜி. வரதராஜன்- பழனியப்பா பிரதர்ஸ்,சென்னை.2007
7. தென்னிந்தியசைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.2010
8. சொற்பிறப்பு - ஒப்பியல் தமிழ் அகராதி.உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.1999